சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை– ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – சென்னையில் 16.2.2007 அன்று அரசு விழாவில் அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு, குக்கர் வழங்கியது – விழா நடத்தப்பட்டதற்கான செலவினம் ரூ.86,400/–க்கு பின்னேற்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை

அரசு ஆணை (ப) எண்.20

நாள் 28.2.2014
திருவள்ளுவராண்டு 2045
விஜய, மாசி 16

படிக்கப்பட்டது

1 அரசாணை (ப) எண்.3, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 9.1.2007
2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையர், ந.க.எண்.4504/என்சி3/2007, நாள் 14.8.2009, 19.4.2011 மற்றும் 23.4.2013.
3 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / ஆணையரது ந.க.எண்.9209/என்சி3/2010, நாள் 4.1.2011.

+++++

**ஆணை**

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, திருநெல்வேலி மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 1000 அங்கன்வாடி மையங்களில் ஒரு மையத்திற்கு ரூ.7,200/– வீதம் சமையலறையை நவீனப்படுத்தி எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு, பிரஷர் குக்கர் ஆகியவற்றை ரூ.72,00,000/– மதிப்பீட்டில் வாங்கி வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையர் பார்வை 2ல் படிக்கப்பட்ட கடிதத்தில், உள்ளாட்சி துறை அமைச்சர், சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் சென்னை மாநகராட்சி மேயர் ஆகியோரது தலைமையில் 1.6.2007 அன்று மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ள/ அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்தப்படும் திட்டத்தை அரசு விழாவாக நடத்தப்பட்டு துவங்கி வைக்கப்பட்டது என்றும் இவ்விழாவிற்கென சென்னை மாவட்ட 12 குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களிடமிருந்து அரசாணையில் குறிப்பிட்டுள்ள "இதர செலவினங்கள் என்ற உபதலைப்பின்" கீழ் ரூ.86,400/–ஐ பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அத்தொகையை அவர்களுக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டியுள்ளது என்பதால் அதனை திரும்ப பெற்று வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும், முதன்மைச் செயலர் / ஆணையர், மேற்படி அரசு விழாவிற்கான செலவினத்தொகை ரூ.86,400/– இச்செலவினம் 2006–2007ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு –2 உட்கூறு 99ன் கீழ் பெறப்பட்ட முன்தொகையும் நேர் செய்யப்பட்டு இது குறித்து மாநில கணக்காயர் தணிக்கைத் தடை நிலுவையில் உள்ளது என்றும் அரசிடமிருந்து மேற்கண்ட தொகைக்கு பின்னேற்பாணை பெறப்பட்டவுடன் முன் தொகை சரி செய்யப்படும் என தெரிவித்துள்ளார். மேற்காணும் அரசு விழாவிற்கு பொதுப்பணித்துறையினரால் செலவு ஏதும் செய்யப்படவில்லை என்றும் தொடக்கவிழாவிற்கான செலவிடப்பட்டதொகை ரூ.86,400/–க்கு பின்னேற்பாணையும் மற்றும் தொகையினை அனுமதித்தும் அத்தொகையை சென்னை மாவட்ட திட்ட அலுவலர்களுக்கு பகிர்ந்தளிக்க அதிகாரமும் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர்/ ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் மூன்று மாவட்டங்களில் 1000 அங்கன்வாடி மையங்களில் உள்ள சமையலறைகளை நவீனப்படுத்தும் திட்டத்திற்கென அரசு விழாவின் மூலம் துவக்கி வைத்ததற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூ.86,400/–ஐ, 2006–2007 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட திருத்திய மதிப்பீட்டில் "2236-02-101-JN-05.02 ஏனைய சில்லரைச் செலவினங்கள்" என்ற கணக்குத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்டதால் மீண்டும் தற்போது "நிதி ஒப்பளிப்பு தேவையில்லை" என்ற அடிப்படையில் பின்னேற்பாணை வழங்கி ஆணையிடுகிறது. இது குறித்து நிலுவையில் உள்ள மாநில கணக்காயரின் தணிக்கை பத்தியினை சரி செய்யுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.2601/நிதி(சந)/2014, நாள்.26.2.2014–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது
அரசு செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலர்/ஆணையர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்
தரமணி, சென்னை–113
மாவட்ட திட்ட அலுவலர்கள்
சென்னை, திருநெல்வேலி மற்றும் திருவாரூர் (முதன்மைச் செயலர்/ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் வழியாக)
ஊதியம் மற்றும் கணக்கு அலுவலர்கள், சென்னை
மாநில கணக்குத்துறைத் தலைவர், சென்னை
நகல்
நிதி (சந) த்துறை
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆர்.எஸ். சுமதி
28/2/2014
பிரிவு அலுவலர்.
28/2/14